My No:- NP/09/FRM/2012 Date:- 30.11.2012

மாகாணத் திறைசேரி சுற்றுநிருபம் :- PT/11/2012

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

**மாகாண அரச ஊழியர் வருடாந்த முற்பணக் கணக்கிணக்கக் கூற்று தயாரித்தல் – 2012**

மாகாண நிதிப் பிரமாணம் 279 ன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் தத்தமது மாகாண அரச ஊழியர் முற்பணக்கணக்கை டிசெம்பர் மாதம் 31ம் திகதியில் உள்ளவாறு இணக்கம் செய்து 15.03.2013ம் திகதிக்கு முன் கணக்காய்வாளர் நாயகத்திற்கு எம்மால் சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக 21.01.2013 அல்லது அதற்கு முன் மாகாணத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். **மாகாணத் திறைசேரி ஊடாகக் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.**

2. அக் கணக்கிணக்கக்கூற்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவங்களில் தயாரித்தல் அவசியம்.

3. ஒரு குறிப்பிட்ட திகதியில் உள்ள மீதிகள் தத்தமது திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் கட்டாயமாக சமப்படுதல் வேண்டும். சாராம்சம் தயாரிக்கும் படிவத்தில் (படிவம் 03) உள்ள விபரங்களுடன் தங்களின் மீதி சமப்படல் வேண்டும்.

4. வலய, பிரதேச காரியாலயங்கள் யாவும் சகல படிவங்களையும் பாவித்து இக் கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிப்பதை திணைக்களத் தலைவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் அவசியம்.

5. எனவே கிளை நிறுவனங்களில் இருந்து பெறப்படும் படிவங்களை ஒன்று சேர்த்து தத்தமது பிரதான காரியாலய கணக்குடன் **ஒருங்கிணைந்த கணக்கிணக்கக்கூற்றே கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் அவசியமாதலால், அவ்வாறு ஒன்றிணைக்கப்பட்ட கணக்கிணக்கக் கூற்றையே மாகாணத் திறைசேரிக்கு அனுப்புதல் வேண்டும்.**

6. மேலும் காலம் தாழ்த்தாது இதுவரை 1ம்,2ம், 3ம் காலாண்டுக் ணக்குகள் தயாரித்து மாகாணத் திறைசேரிக்கு அனுப்பப்படாது இருப்பின் உடனடியாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

7. தங்கள் திணைக்கள முற்பணக்கணக்கு எல்லைகள் மீளமைக்கப்பட வேண்டியிருப்பின் அவற்றை மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும். இது சம்பந்தமாக பொது நிதி திணைக்கள 401ம் இலக்கமும் **29.08.2002ம் திகதியும் கொண்ட சுற்றுநிருபத்தின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.**

8. இக் கணக்கிணக்கக் கூற்றின் நான்கு (04)பிரதிகள் மாகாணத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

9. இது சம்பந்தமாக மேலும் விளக்கங்கள் தேவைப்படின் மாகாணத் திறைசேரி பணிப்பாளர் – கணக்குகளும் கொடுப்பனவுகளும் அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியும்.(021 – 2220852)

**அ.மனோரஞ்சன்**
**பிரதிப் பிரதம செயலாளர் – நிதி,**
**வட மாகாணம்**

A. Manoranjan
Deputy Chief Secretary - Finance
Northern Province

பிரதிகள்: –

1. கௌரவ ஆளுநரின் செயலாளர் – வ.மா
2. பிரதம செயலாளர் – வ.மா
3. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் – வ.மா
4. பணிப்பாளர், மாகாணக் கணக்காய்வுத் திணைக்களம் – வ.மா

} தகவலுக்காக

**பிற்குறிப்பு:– இக்கூற்றுத் தயாரிப்பதற்கான மாதிரிப் படிவங்களின் மென்பிரதியை மாகாணத் திறைசேரியில் பெற்றுக் கொள்ள முடியும்.**

79/2, Racca Road, Chundukulli, Jaffna
Phone No. DCS(F) Direct 021-2220850 Fax - 021 - 2220853 General No - 021-2220854
E-Mail – npctreasury@gmail.com